நகராட்சி அலுவலகம், ஆத்தூர்,
(சேலம் மாவட்டம்),
நாள். **29.05.2023.**

அன்புடையீர்,

இந்நகர்மன்றம் ஏப்ரல்–**2023**ம் மாத அவசர கூட்டம் வருகிற **31.05.2023**தேதி புதன்கிழமை மாலை **04.00** மணிக்கு தந்தை பெரியார் நகர்மன்ற கூடத்தில் நடைபெற உள்ளது. கூட்டபொருள்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. தாங்கள் தவறாமல் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**( ஒம் ) .திருமதி.ம. நிர்மலாபபிதா**
**தலைவர்**
**ஆத்தூர் நகராட்சி.**

<u>மன்ற பொருள்கள்</u>

1 நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் **.2571/2017/ஜே1**, நாள்.**28.11.20217**ன் படி இந்நகராட்சியில் உள்ள மொத்த குடியிருப்புகளில் **300** வீடுகளையும் ஆய்வு செய்து டெங்கு நோய் மற்றும் இதர தொற்று நோய்களை தடுக்கும் பணிகளை மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் நியமித்துக்கொள்ள உத்திரவு வழங்க கோரியுள்ளார். மேலும் இவர்களுக்கான ஊதியம் மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் ஊதிய விகிாப்படி உரிய விதிமுறைகளின் படி EPF , ESI முதலியவைகளை கணக்கீட்டு ஒப்பந்த அடிப்படையில் வருடம் முழுவதும் DBC பணியாளர்களை நியமித்து தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தியுள்ளார்.

அதன் படி இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் டெங்கு நோய் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைள் பணி மேற்கொள்ள **35**டெங்கு நோய் தடுப்பு பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் ஸ்ரீ உதயா மகளீர் சுய உதவி குழு மூலம் தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்து வருகிறார்கள். ( நாள் ஒன்றுக்கு ரூ.**429/–** மட்டும் சேலம் மாவட்ட ஆட்சித்லைவர் செந்தார விலை விகித பட்டியல் படி ) மேற்படி மகளீர் சுய உதவிகுழுக்ககான ஒப்பந்தகாலம் முடிவு பெறுகிறது. எனவே ஒரு மாத காலத்திற்கு கீழ்க்கண்டவாறு ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| **1.** | **35** நபர்களுக்கு **35** x429x 30 | = | ரூ. **4,50, 450/–** |
| 2. | EPF 13% | = | ரூ. 58,559/- |
| 3. | ESI 3.25% | = | ரூ. 58,559/- |
| | மொத்தம் | = | ரூ **523649/–** |
| **4.** | நிர்வாக செலவினம் | = | ரூ. **26182/–** |
| | பெரு மொத்தம் | = | ரூ. **5,49,831/–** |

எனவே உரிய விதிமுறைகளின் படி மகளீர் சுய உதவி குழு மூலம் ஒப்பந்தம் கோரி **35** டெங்கு பணியாளர்களை ஓராண்டிற்கு நியமித்து கொள்ளவும் ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்திரவு வழங்கும் ஒருமாத காலத்திற்கு ஏற்கனவே அனுமதித்த ஸ்ரீ உதயா மகளீர் சுய உதவி குழு ஆத்தூர் மூலம் பணியினை கொள்வதற்கும் அனுமதியும் நான்கு மாத காலத்திற்கான செலவு ரூ.**21, 99,324/–** யை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டு டெங்கு நோய் தடுப்பு பணியாளர்களுக்கு ஊதியம் வழங்குவதற்கும் மன்றம் அனுமதி வேண்டி மன்ற பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.
**( தீர்மான எண் 650, நாள்.31.05.2023, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது )**

2. இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவிலுள்ள அனைத்து வார்டுகளிலுள்ள உள்ள பொது கழிப்பிடங்கள் , பேருந்து நிலையம் , அரசியல் பொதுகூட்டம், நீதிமன்றம், வருவாய் வட்டாட்சியர் அலுவலகம், மற்றும் கோவில் திருவிழாக்கள் ஆகியவற்றிற்கு கிருமி நாசினி பிளிச்சிங் பவுடர் மூன்று மாத கால அளவிற்கு வாங்கி கொள்வதற்கு செலவினம் ரூ. 1,42,000/– வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு நகர் மன்றத்தின் அனுமதி வேண்டி மன்ற பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

பிளிச்சிங் பவுடர் கொள்முதல் செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரவும் அதற்குரிய செலவினம் ரூ1,42,000/– வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றம் அனுதிக்கலாம்.

**( தீர்மான எண் 651, நாள்.31.05.2023, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது )**

3. இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவிலுள்ள அனைத்து வார்டுகளிலுள்ள உள்ள பொது கழிப்பிடங்கள் , பேருந்து நிலையம் , அரசியல் பொதுகூட்டம், நீதிமன்றம், வருவாய் வட்டாட்சியர் அலுவலகம், மற்றும் கோவில் திருவிழாக்கள் ஆகியவற்றிற்கு தெளிப்பதற்கு கிருமி நாசினி நீர்த்த சுண்ணாம்பு தூள் (Hyorated Lime Powder ) மூன்று மாத கால அளவிற்கு வாங்கி கொள்வதற்கு செலவினம் ரூ. 55,000/– வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு நகர் மன்றத்தின் அனுமதி வேண்டி மன்ற பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

பிளிச்சிங் பவுடர் கொள்முதல் செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரவும் அதற்குரிய செலவினம் ரூ. 55,000/– வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றம் அனுதிக்கலாம்.

**( தீர்மான எண் 652, நாள்.31.05.2023, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது )**

4. ஆத்தூர் நகராட்சிக்குட்பட்ட கீழ்காணும் பகுதிகளின் சாலைகளை JCB இயந்திரம் மூலமாக தோண்டி குடிநீர் பகிர்மான குழாய் அமைக்கப்பட்டதில் அப்பகுதிகளின் சாலைகள் பழுதடைந்துள்ளதால் பொதுமக்களுக்கும் போக்குவர.திற்கும் மிகவும் இடையூறாக உள்ளதாலும் மேலும் பள்ளிகுழந்தைகள் அவ்வழியாக செல்வதால் சிறுச்சிறு விபத்துக்கள் ஏற்படும் நிலையில் உள்ளதால் கீழ்காணும் சாலைகளை பராமரிப்பு பணிகள் செய்வதற்கு தயார் செய்துள்ள மதிப்பீடிற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

<u>தார்சாலை புதுப்பித்தல் பணிகள்</u>

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடுத் தொகை (ரூ இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | 60அடி காந்தி காந்திரோடு மெயின் மற்றும் குறுக்குச்சாலைகள் பூங்கா மேற்குபுறம் காந்தி நகர் OHT வடக்கு தெற்கு சாலை | 21.00 |
| 2 | வார்டு எண் 27ல் இரயிலடி தெரு தார்சாலை புதுப்பித்தல் பணி | 11.00 |
| 3 | வார்டு எண் 7ல் உப்பு ஓடை மெயின்ரோடு VAO அலுவலகம் முதல் பைபாஸ் சாலை சந்திப்பு வரை தார் சாலை அமைத்தல் பணி | 18.00 |

அலுவலகக் குறிப்பு

1.மன்றம் அனுமதிக்கலாம், செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

2.மேற்படி பணியின் அவசரஅவசியத்தை கருதி மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகர் மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு மேல் நடவடிக்கை எடுத்துள்ளதையும் மன்றம் ஏற்கலாம் (ந.க.எண். 1453 /2023/இ1)

**( தீர்மான எண் 653, நாள்.31.05.2023, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது )**

5. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் வார்டு எண் 1 முதல் வார்டு எண் 33 வரையுள்ள பகுதிகளில் வெளிக்கொணர்வு பணியாளர்களை கொண்டு வீடு வீடாக குப்பைகளை சேகரம் செய்து குறிப்பிட்ட நுண் உரம் செயலாக்கம் தயாரிக்கும் பணியினை ஒப்பந்த அடிப்படையில் 81 வெளிகொணர்வு பணியாளர்களை பணியமர்த்தி கொள்ளவும் பணி மேற்கொள்ளவும் அலுவலக உத்தரவு ந.க.எண்–3983/2018/எச்1, நாள்–03.03.2023 இன்படி RELYON FACILITY PVT LTD, Chennai நிறுவனத்திற்கு வழங்கிய பணி உத்தரவு 06.05.2023 ஆம் தேதியில் முடிவடைகிறது.

புதியதாக திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகளுக்கு ஒப்பந்த அடிப்படையிலும் மற்றும் அதில் புதியதாக பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு வெளிக்கொணர்வு ஒப்பந்த அடிப்படையில் மூன்று ஆண்டுகளுக்கு தற்காலிக நியமனம் செய்து கொள்ள ந.நி.இயக்குநர், சென்னை அவர்களிடமிருந்து உத்தரவு வரப்பெற்றுள்ளது (ந.க.எண்–34638/2022/EA2-SWM-1, நாள்–10.01.2023) அதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் செய்முறை நடைபெற்று வரும் நிலையில் Tender Process ஏற்கனவே பணிபுரிந்து வரும் தூய்மை பணியாளர்கள் வெளிக்கொணர்வு அடிப்படையில் 81 பணியாளர்களை ஏற்கனவே பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளி அடிப்படையில் நுண் உரம் செயலாக்க பணியினை இரண்டு மாத காலத்திற்கு மேற்கொள்ளவும் (07.05.2023 முதல் 07.07.2023) உத்தேச செலவின தொகை ரூ.25/– இலட்சம் செலவினம் மேற்கொள்ளவும் சம்பந்தப்பட்ட நிறுவனம் RELYON FACILITY PVT LTD பணி உத்தரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

அலுவலக குறிப்பு :

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அவசர அத்தியாவசியத்தை முன்னிட்டு மன்றம் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**( தீர்மான எண் 654, நாள்.31.05.2023, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது )**

**6.** ஆத்தூர் நகராட்சி வார்டு எண்8ல் கோட்டை பெருமாள் கோவில் தெரு மெயின் சாலை மற்றும் குறுக்கு தெருக்களில் சிமெண்ட் சாலைகளில் பைப் லைன் நீடிப்பு செய்யப்பட்ட சாலையினை தோண்டப்பட்ட பகுதிகள் போக்குவரத்திற்கும் பொது மக்களுக்கும் மிகவும் இடையூறாக உள்ளதாலும் மேலும் முனியப்பன் கோவில் தேர் திருவிழா விரைவில் நடைபெற உள்ளதாலும் மேற்படி சாலையின் வழியாக தான் தேர் செல்ல உள்ளதால் பொதுமக்களின் நலன் கருதி மேற்படி சாலைகளிலுள்ள பழுதடைந்த பகுதிகளை சிமெண்ட் கலவை கொண்டு பேஜ் பணி செய்துர கோரி வார்டு நகர் மன்ற உறுப்பினர் தனது கடிதத்தில் கோரியுள்ளார். அதன்படி மேற்படி பைப் லைன் அமைக்க சாலையினை தோண்டப் பட்ட பகுதிகளை சிமெண்ட் கலவை கொண்டு பேஜ் பணிக்கு ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நகர் மன்றம் தனது தீர்மானம் எண் 646 நாள் 28.04.2023ல் அனுமதி வழங்கியதன்பேரில் மேற்படி பணிக்கு 04.05.2023ல் மின்னனுவில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ் கண்டவாறு வரபெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கு முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் | கொடுத்துள்ள விலை விகிதம் |
|---|---|---|
| 1 | M.S. Matriex Shelters,<br>12/2-1 Mahalakshmi Nagar,<br>Kannamoalayam,SulurT,kCoimbatore D.t | 0.80% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு. R.செல்லக்கண்ணு ஒப்பந்ததாரார்,ஆத்தூர். | 0.40% மதிப்பீட்டை விட அதிகம் |

அலுலவலக குறிப்பு

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழுங்கிய M.S. Matriex Shelters, என்ற நிறுவனத்தின்0.80% மதிப்பீட்டை விட குறைந்த விலை ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதினை ஏற்க மன்றத்தின் பார்வைக்கு வைக்கப் படுகிறது. **(தீர்மான எண் 655, நாள்.31.05.2023, அலுவலக குறிப்பு அனுமதிக் கப்பட்டது )**

7. ஆத்தூர் நகராட்சிக்குட்பட்ட 60அடி காந்தி காந்திரோடு மெயின் மற்றும் குறுக்குச் சாலைகள் பூங்கா மேற்குபுறம் காந்தி நகர் OHT வடக்கு தெற்கு ஆகிய சாலைகளை .குடிநீர் பகிர்மான குழாய் அமைக்கப்பட்டதில் அப்பகுதிகளின் சாலைகள் பழுதடைந்துள்ளதால் சரி செய்யும் பணிக்கு தயார் செய்துள்ள மதிப்பீடு தொகை ரூ.21.00 இலட்சத்திற்கு 05.05.2023ல் மின்னனுவில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ் கண்டவாறு வரபெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் | விலை விபரம் அதிகம்/ குறைவு |
|---|---|---|
| 1 | திரு.எஸ்.முகமது ஹனிபாஒப்பந்ததாரர், ஆத்தூர் | 19.28% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | திரு.எம்.முகமது இஸ்மாயில் ஒப்பந்ததாரர், ஆத்தூர் | 0.07% மதிப்பீட்டை விட குறைவு |

அலுவலகக் குறிப்பு

இப்பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி 0.07% மதிப்பீட்டு விலையை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.எம்.முகமது இஸ்மாயில் ஒப்பந்ததாரர், ஆத்தூர் என்பவரின் ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(தீர்மான எண் 656, நாள்.31.05.2023, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது )**

8. ஆத்தூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 27ல் இரயிலடி தெருவில் தார் சாலையினை குடிநீர் பகிர்மான குழாய் அமைக்கப்பட்டதில் சாலைகள் சரி செய்யவும்பணிக்கு தயார் செய்துள்ள மதிப்பீடுத்தொகை ரூ.11.00 இலட்சத்திற்கு பணிக்கு 05.05.2023ல் மின்னனுவில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ் கண்ட ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கு முடிவிற்கு வைக்கப் படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் | விலை விபரம் அதிகம்/ குறைவு |
|---|---|---|
| 1 | திரு.எஸ்.முகமது ஹனிபாஒப்பந்ததாரர், ஆத்தூர் | 6.66% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | திரு.எம்.முகமது இஸ்மாயில் ஒப்பந்ததாரர், ஆத்தூர் | 0.07% மதிப்பீட்டை விட குறைவு |

அலுவலகக் குறிப்பு

இப்பணிக்கு பெறப்பட்ட குறைந்த ஒப்பந்தப்புள்ளி 0.07% கொடுத்துள்ள திரு.எம்.முகமது இஸ்மாயில் ஒப்பந்ததாரர், ஆத்தூர் என்பவரின் ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**(தீர்மான எண் 657, நாள்.31.05.2023, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது )**

9. ஆத்தூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 7ல் உப்பு ஓடை மெயின்ரோடு VAO அலுவலகம் முதல் பைபாஸ் சாலை சந்திப்பு வரைஉள்ள தார் சாலையானது பழுதடைந்துள்ளதால் சரி செய்ய இப்பணிக்கு தயார் செய்துள்ள மதிப்பீடுத்தொகை ரூ.18.00 இலட்சத்திற்கு 05.05.2023ல் மின்னனுவில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ் கண்டவாறு வரபெற்ற ப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கு முடிவிற்கு வைக்கப் படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் | விலை விபரம் அதிகம்/ குறைவு |
|---|---|---|
| 1 | திரு.எஸ்.முகமது ஹனிபாஒப்பந்ததாரர், ஆத்தூர் | 3.54% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | திரு.எம்.முகமது இஸ்மாயில் ஒப்பந்ததாரர், ஆத்தூர் | 0.10% மதிப்பீட்டை விட குறைவு |

அலுவலகக் குறிப்பு

இப்பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் 0.10% மதிப்பீட்டு விலையை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.எம்.முகமது இஸ்மாயில் ஒப்பந்ததாரர், ஆத்தூர் என்பவரின் ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் ஏற்கலாம்..

**(தீர்மான எண் 658, நாள்.31.05.2023, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது )**

10. ஆத்தூர் நகராட்சியில் 9 மேல் நிலை நீர்தேக்கத்தொட்டிகள் மூலம் நகரிலுள்ள 33 வார்டுகளிலும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டுவருகிறது மேற்படி மேல் நிலை நீர்தேக்கத் தொட்டிகளுக்கு மின்மோட்டார் மூலமே நீறேற்றம் செய்யப்படுகிறது. மேலும் 4 MCCக்கள், பராமரிப்பு 50 எண்ணிக்கை கழிப்பிடங்கள் பராமரிப்பு மற்றும் FSTP வளாகம் பல்வேறு கட்டிடங்கள் நகராட்சியால் பரமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி இடங்களில் உள்ள மின் மோட்டார்கள், மின் சாதனங்கள்,மின் விளக்குகள்போன்றவற்றில் அவ்வப்போது ஏற்படும் சிறுச்சிறு பழுதுகளை உடனுக்குடன் கவனிக்க நகராட்சியால், நிரந்த குடிநீர் பணியாளர்கள் மற்றும் மின்பணியாளர்கள் எவரும் இல்லை என்பதால் இதற்கான பணிகளை மேற்கொள்ள உரிய செயல் திறன் பணியாளர்கள் மூன்று நபர்களை ஒப்பந்ததாரர்கள் மூலமாக ஒப்பந்த அடிப்படையில் பணியில் அமர்த்திக்கொள்ளவும், அதற்கான செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம், செலவினத்தை வருவாய் நிதி/குடிநீர் நிதியில் இருந்து மேற் கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(தீர்மான எண் 659, நாள்.31.05.2023, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது )**

**11.** வார்டு எண்20ல் உள்ள சொக்கன் தெரு, கோவிந்தன் தெரு மற்றும் மரியசூசை தெரு ஆகிய தெருக்களுக்கு அருகிலுள்ள ஆழ்துளை கிணற்றிலிருந்து பைப் லைன் நீட்டிப்பு செய்து தருமாறு வார்டு உறுப்பினர் கோரியதற்கு இணங்க அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு குடிநீர் அல்லாத பயன் பாட்டிற்கு தண்ணீர் வசதி செய்தல் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடுத் தொகை ரூ.1.50 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம், செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

**(தீர்மான எண் 660, நாள்.31.05.2023, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது )**

12. இந்நகராட்சி அலுவலகத்தில் உள்ள 28 கணினிகள், 29 பிரிண்டர்கள், சி.சி டி.வி கேமாக்கள் 8, UPS பேட்டரிகள் 20 ,லேப் டேப் மற்றும், மற்றும் ஸ்கேணர் ஆகியன 01.07.2023 முதல் 30.06.2024 முடிய கணினிகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை பழுது நீக்கம் செய்தல் (AMC) மற்றும் ஆண்டு பராமரிப்பு பணிக்கு ஆகும் செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம், செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற் கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(தீர்மான எண் 661, நாள்.31.05.2023, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது )**

13. வார்டு எண்9ல் நேருநகரிலுள்ள ரேசன் கடை அருகிலுள்ள தெருவிற்கு ஏற்கனவே உள்ள ஆழ்துளை கிணற்றிலிருந்து பைப் லைன் நீட்டிப்பு செய்து அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு குடிநீர் அல்லாத பயன் பாட்டிற்கு தண்ணீர் வசதி செய்தல் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடுத் தொகை ரூ.40,000/—க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம், செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

**(தீர்மான எண் 662, நாள்.31.05.2023, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது )**

14. ஆத்தூர் நகராட்சி **33** வார்களிலும் உள்ள பகுதிகளில் **82.28** கீ.மீ நீளமுள்ள சாக்கடைகளில் அடைப்பு மற்றும் மண் (Silt) நிரம்பி உள்ளதால் கழிவு நீர் தேக்கம் ஏற்பட்டு தெருவில் நிரம்பி ஓடுகிறது. மேலும் கழிவு நீர் தேங்கி உள்ளதால் கொசுப் புழு வளர்ச்சி ஏற்பட்டும் பொதுசுகாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த சாக்கடையில் தேங்கியுள்ள மண்ணை (Silt) அகற்ற போதிய தூய்மை பணியாளர்கள் இல்லை ஆகவே இந்த சாக்கடைகளில் தேங்கியுள்ள கழிவு நீர் அடைப்பு மற்றும் மண்ணை Mini Hihachi என்ற இயந்திரத்தை வாடகைக்கு எடுத்து தேவையான இடங்களில் உள்ள சாக்கடைகளில் உள்ள மண்மற்றும் அடைப்பை எடுக்க ஆகும் தோராய மதிப்பீடு ரூ.**2.00** இலட்சத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் பதிவு செய்யலாம்

**(தீர்மான எண் 663, நாள்.31.05.2023, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது )**

15. வார்டு எண் 7ல் கோட்டை புதிய பாலத்தின் அருகில் அம்மன் நகர் பகுதிக்கு குடிநீர் வழங்கி வந்த குடிநீர் பகிர்மான குழாய் அமைக்கப்பட்டுள்ள பகுதிகளில் புதிய பாலம் கட்டுதல் பணி நடைபெற்று வருவதால் மேற்படி பகிர்மான குழாயினை மாற்றி புதிதாக **3** பி.வி.சி குடிநீர் பகிர்மான குழாய் அமைத்து அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு குடிநீர் வசதி செய்தல் பணிக்கு தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு தொகை ரூ.**95000/–** க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது

அலுவலகக் குறிப்பு

**1.** மன்றம் அனுமதிக்கலாம், செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

**2.** மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை எடுத்துள்ளதையும் மன்றம் ஏற்கலாம். **(தீர்மான எண் 664, நாள்.31.05.2023, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது )**

**16.** இந்நகராட்சி வார்டு எண்கள் **14,15,16** மற்றும் **17**ல் ஆகிய பகுதிகளுக்கு **6** பி.வி.சி பகிர்மான குழாய் மூலம் குடிநீர் வழங்கி வந்த பைப்லைன்கள் , மதினா மரக்கடைஅ ருகில் பழுது ஏற்ப்பட்டுள்ளது. மேலும் புதுப்பேட்டை பாலம் அருகே உடைப்பு ஏற்பட்டுள்ளது. மேலும் புதுப்பேட்டை பாலம் அருகே உள்ள பி.வி.சி. குழாய் பைப்புகளுக்கு பதிலாக சி.ஐ.பைப் மாற்றம் செய்ய வேண்டியுள்ளது. மேலும் **6** பி.வி.சி பைப்லைன் அமைக்கவும், அருகிலுள்ள பாலத்தில் **150**mm பி.வி.சி குழாய் இருப்பிலுள்ள **150**mm சி.ஐ. பைப்புகளை பொருத்தி தண்ணீர் வசதி செய்தல் பணிக்கு தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு தொகை ரூ.**78, 000/–** க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது

அலுவலகக் குறிப்பு

**1.** மன்றம் அனுமதிக்கலாம், செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

**2.** மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை எடுத்துள்ளதையும் மன்றம் ஏற்கலாம்.

**(தீர்மான எண் 665, நாள்.31.05.2023, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது )**

17. ஆத்தூர் நகராட்சி 33 வார்களிலும் உள்ள பகுதிகளில் சுமார் 82.28 கீ.மீ நீளமுள்ள திறந்தவெளி கிணறு சாக்கடை உள்ளது. இவற்றில் அடிக்கடி அடைப்பு மற்றும் மண்சேர்ந்து அடைப்பு ஏற்பட்டு கழிவு நீர் தேங்கி தெருவில் செல்வதால் பொதுசுகாதாரம் பாதிக்கப்படுகிறது. இவற்றை நகராட்சி தூய்மை பணியாளர்களை கொண்டு சுத்தம் செய்ய கடினமாக உள்ளது. ஆகவே மேற்படி சாக்கடைகளைஅகற்ற மற்றும் நகராட்சி உரகிடங்கில் குப்பைகளை சரி செய்ய Mini Hihachi இயந்திரம் ஒன்று 15th CFC 2023-2024 ம் ஆண்டிற்கான நிதியில் வாங்குவதற்கு ரூ.31.00 இலட்சத்திற்கு தயார் செய்துள்ள திட்ட கருத்துருக்கள் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு அனுப்பி வைத்து உரிய நிதியினை முழுமான்யமாக பெறுவதற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப் படுகிறது.

அலுவலகக் குறிப்பு

தற்சமயம் நகராட்சியில் நிதிநிலைமை திருப்திகரமாக இல்லாத காரணத்தால் Mini Hihachi இயந்திரம் ஒன்று வாங்குவற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு திட்ட கருத்துருக்கள் தயார் செய்து அனுப்பவும் மன்றம் அனுமதிக்கலாம்.
**(தீர்மான எண் 666, நாள்.31.05.2023, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது )**

18. இந்நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளில் தமிழக அரசின் இரண்டு ஆண்டு சாதனைகளை 10‘0X10‘0 அளவில் பிளக்ஸ் அச்சடித்து மரங்களில் (மராீப்பர்களில்) இணைத்து பேணர்கள் சுற்றிலும் மராீப்பர்களை அடித்து 15 எண்ணிக்கை பேனர்கள் வைக்கவும் சாதனைகளின் வீடியோக்களை LED திரையில் விளம்பரபடுத்தும் வகையில் 15 நாட்களுக்கு வாடகை அடிப்படையில் பணிகள் செய்ய உத்தேச செலவினம் தொகை ரூ.36,000/-க்கு 12.05.2023ல் விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரபெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளிகள் விபரம் | விலைவிபரம் | அதிகம்/ குறைவு |
|---|---|---|---|
| 1 | திரு.கோகுல் கார்ட்ஸ் & ப்ளக்க்ஸ் பிரிண்டிங், கனர வங்கி எதிரில் ஆத்தூர் | ரூ.35,994 /- | குறைவு |
| 2 | திரு.கோகுல் மல்டி கலர்ஆப்செட் ராம்ராஜ் ஹோரூம் கள்ளக்குறிச்சி | ரூ.41,167 /- | அதிகம் |
| 3 | திரு .கோகுல் கம்ப்யூட்டர் ஆப்செட் &, டிஜிட்டல் 21 பேருந்து நிலையம் ஆத்தூர் | ரூ.40,807 /- | அதிகம் |

அலுவலக குறிப்பு

மேற்கண்டவாறு பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் திரு. கோகுல் கார்ட்ஸ் & ப்ளக்ஸ் பிரிண்டிங், கனர வங்கி எதிரில் , ஆத்தூர் என்ற நிறுவனத்தார் கொடுத்துள்ளதை குறைந்த விலைப்புள்ளியினை ஏற்கலாம் .

**(தீர்மான எண் 667, நாள்.31.05.2023, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது )**

**19.** இந்நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் (நகர்புறம்) (Swachu Bharath Mission (Urban) 2.0 2021-2022 திட்டத்தின்கீழ் சமுதாய கழிவறை, பொது கழிப்பிடம், தனிநபர் கழிப்பிடம் உ மற்றும் சிறுநீர் கழிப்பிடம் கட்ட நகராட்சி பங்களிப்புடன் கூடிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நகராட்சிநிர்வாகஇயக்குநர்,சென்னைஅவர்களின்கடிதம்ந.க.எண்.**5990/2022**/SBM நாள்.**11.04.2022**ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி ஆத்தூர் நகராட்சி வார்டு எண்**31**ல் அம்பேத்கார் நகர் பகுதியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் புதியதாக சமுதாய கழிப்பிடம் கட்டுதல் பணிக்கு **24.00** இலட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ள**22.06.2022**ல் மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப் புள்ளிகள் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.ஜே.மகேஸ்வரன் என்பவருக்கு **01.07.2022**ல் வேலை உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வந்த நிலையில் மேற்படி பணியினை ஒப்பந்த காலத்திற்குள் ஒப்பந்ததாரர் முழுமையாக செய்து முடிக்காத காரணத்தால் பலமுறை நேரிலும் பல நினைவூட்டு கடிதத்தின் மூலமாகவும் பணியினை விரைந்து முடிக்க மேற்படி ஒப்பந்ததாரருக்கு தெரிவித்தும் ஒப்பந்ததாரர் எவ்விதமான பதிலும் விளக்கமும் அளிக்க முன் வரவில்லை. இப்பணியின்நிலைமைகுறித்து நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களால் ஆய்வு கூட்டத்தில் விரைந்து முடிக்க அறிவுறுத்தியுள்ளார். இப்பணிக்கான மீதமுள்ள பணிக்கான மதிப்பீடுத்தொகை ரூ.**14,50,000/–**க்கு மறுஒப்பந்தப்புள்ளிகள் கோர மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

**1.** திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே கொடுத்துள்ளஒப்பந்தப் புள்ளியினை இரத்து செய்ததினை மன்றம் பதிவு செய்யலாம்

**2.** இப்பணிக்கான ஒப்பந்தப் புள்ளியினை இரத்து செய்தது போக மீதமுள்ள பணிக்கு மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதை மன்றம் பதிவு செய்யலாம்.

**(தீர்மான எண் 668, நாள்.31.05.2023, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது )**

**20.** தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் (நகர்புறம்) (Swachu Bharath Mission (Urban) 2.0 2021-2022 திட்டத்தின்கீழ் சமுதாய கழிவறை, பொது கழிப்பிடம், தனிநபர் கழிப்பிடம் மற்றும் சிறுநீர் கழிப்பிடம் கட்ட நகராட்சி பங்களிப்புடன் கூடிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நகராட்சிநிர்வாகஇயக்குநர்,சென்னைஅவர்களின்கடிதம்ந.க.எண்.**5990/2022**/SBM நாள்.**11.04.2022**ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி ஆத்தூர் நகராட்சி வார்டு எண்**26**ல் பைத்தூர்ரோடு பகுதியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் புதியதாக சமுதாய கழிப்பிடம் கட்டுதல் பணிக்கு **24.00** இலட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ள**22.06.2022**ல் மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப் புள்ளிகள் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.ஜே.மகேஸ்வரன் என்பவருக்கு **01.07.2022**ல் வேலை உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வந்த நிலையில் மேற்படி பணியினை ஒப்பந்த காலத்திற்குள் ஒப்பந்ததாரர் முழுமையாக செய்து முடிக்காத காரணத்தால் பலமுறை நேரிலும் பல நினைவூட்டு கடிதத்தின் மூலமாகவும் பணியினை விரைந்து முடிக்க மேற்படி ஒப்பந்ததாரருக்கு தெரிவித்தும் ஒப்பந்ததாரர் எவ்விதமான பதிலும் விளக்கமும் அளிக்க முன் வரவில்லை. இப்பணியின் நிலைமை குறித்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மற்றும் சென்னை அவர்களால் ஆய்வு கூட்டத்தில் விரைமுடிக்க அறிவுறுத்தியுள்ளார். இப்பணிக்கான ஒப்பந்தப் புள்ளியினை இரத்து செய்து மீதமுள்ள பணிக்கான மதிப்பீடுத்தொகை ரூ.**15,15,000/–**க்கு மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோர மன்றத்தின்பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே கொடுத்துள்ளஒப்பந்தப் புள்ளியினை இரத்து செய்ததினை மன்றம் பதிவு செய்யலாம்

2. இப்பணிக்கான ஒப்பந்தப் புள்ளியினை இரத்து செய்தது போக மீதமுள்ள பணிக்கு மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதை மன்றம் பதிவு செய்யலாம்

**(தீர்மான எண் 669, நாள்.31.05.2023, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது )**

21. இந்நகராட்சிக்கு புதியதாக 10 எண்ணிக்கை LCV வாகனங்கள் கொள்முதல் செய்தல் பணிக்கு நடைபெற்ற மறுஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை Times India என்ற ஆங்கில நாழிதழ் மற்றும் Hindu Tamil என்ற தமிழ் நாளிதழ் ஆகிய தினசரி நாழிதழ்களில் ஒரு நாள்மட்டும் விளம்பரம் செய்தற்கான செலவினத் தொகை ரூ.99,540/-ஐ விளம்பர செய்த நிறுவனமான Uipras adz என்ற நிறுவனத்தாருக்கு பில் தொகை வழங்க மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம், செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண்.1449/2023/இ1)

**(தீர்மான எண் 670, நாள்.31.05.2023, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது )**

22. ஆத்தூர் நகராட்சி 33 வார்களிலும் உள்ள பகுதிகளில் 82.28 கீ.மீ நீளமுள்ள சாக்கடைகளில் அடைப்பு மற்றும் மண் (Silt) நிரம்பி உள்ளதால் கழிவு நீர் தேக்கம் ஏற்பட்டு தெருவில் நிரம்பி ஓடுகிறது. மேலும் கழிவு நீர் தேங்கி உள்ளதால் கொசுப் புழு வளர்ச்சி ஏற்பட்டும் பொதுசுகாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த சாக்கடையில் தேங்கியுள்ள மண்ணை (Silt) அகற்ற போதிய தூய்மை பணியாளர்கள் இல்லை ஆகவே இந்த சாக்கடைகளில் தேங்கியுள்ள கழிவு நீர் அடைப்பு மற்றும் மண்ணை Mini Hihachi என்ற இயந்திரத்தை வாடகைக்கு எடுத்து தேவையான இடங்களில் உள்ள சாக்கடைகளில் உள்ள மண்மற்றும் அடைப்பை எடுக்க ஆகும் தோராய மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு 16.05.2023ல் ஒப்பந்தப்புள்ளிக்ள் கோரப்பட்டதில் கீழ் கண்டவாறு வரபெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் | சதவீதம் அதிகம்/குறைவு |
|---|---|---|
| 1 | M/S.ஸ்ரீதேவி.கண்ஸ்ட்ரக்ஷன்ஸ்,ஒப்பந்ததாரர் ஆத்தூர் | 0.05%மதிப்பீட்டைவிட குறைவு |
| 2 | திரு.ஆர்.செல்லக்கண்ணு ஒப்பந்ததாரர் , ஆத்தூர் | 0.12% மதிப்பீட்டைவிட அதிகம் |

அலுவலகக் குறிப்பு

மேற்கண்டவாறுபெறப்பட்டஇரண்டுஒப்பந்தப்புள்ளிகளில்M/S.ஸ்ரீதேவிகண்ஸ்ட்ரக்ஷன்ஸ், ஒப்பந்ததாரர் ,ஆத்தூர் என்பவரின் 0.05% மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்து உள்ளதை ஏற்கலாம்

**(தீர்மான எண் 671, நாள்.31.05.2023, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது )**

**23.** ஆத்தூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்**25**ல் கண்ணாடிமில் அண்ணா நகர் பகுதியில் KNMT 2021-2022 ன் கீழ் ரூ.**67.00** இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக பூங்கா உருவருவாக்குதல் பணி நடைபெற்று பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. மேற்படி மதிப்பீட்டில் பூங்கா முன் புறம் அருகிலுள்ள பழைய ஆழ்துளை கிணற்றின் பைப் லைன் மற்றும் மோட்டாரை பயன் படுத்தும் வகையில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைக்க வகைப்படுத்தப்படவில்லை தற்போது பழைய ஆழ்துளை கிணற்றில் போதுமான தண்ணீர் இல்லாத காரணத்தால் பூங்காக்களிலுள்ள செடிகள் காய்ந்து பசுமையை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே மேற்படி பூங்காவை பாதுகாக்கும் பொருட்டு அப்பகுதியில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து அதில் மின் மோட்டார் பொருத்தி தண்ணீர் வசதி செய்தல் பணிக்கு தயார் செய்துள்ள மதிப்பீடுத்தொகை ரூ.**4,00,000/–** இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம், செலவினத்தை பெறப்படும் ஏதாவது அரசின் திட்ட நிதியிலிருந்து / குடிநீர் நிதி அல்லது வருவாய் நிதி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
**(தீர்மான எண் 672, நாள்.31.05.2023, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது )**

**24.** வார்டு எண் **27**ல் இராஜாஜி காலனி பகுதியில் உள்ள குறுக்கு தெருக்களில் (கோர்ட்தெரு நடுத்தெரு) நான்கு இடங்களில் உள்ள சிறுபாலங்கள் மிகவும் பழுதடைந்து பொதுமக்கள் மற்றும் போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாக உள்ளது. இதனால் இரு சக்கர வாகனங்களில் செல்வோருக்கு சிறுச்சிறு விபத்துக்கள் ஏற்படும் அபாய நிலை உள்தால் மேற்படி இடங்களில் பழுதடைந்துள்ள சிறுபாலங்களை புதுப்பிக்க வேண்டியுள்ளதால் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடுத் தொகை ரூ.**2.00** இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம், செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
**(தீர்மான எண் 673, நாள்.31.05.2023, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது )**

**25.** இந்நகராட்சிக்கு சொந்தமான கடைவீதி மேல் நிலை நீர்தேக்கத் தொட்டியின் கீழ் உள்ள பகுதிகளில் புதியதாக தரைமட்ட நீர்தேக்கத்தொட்டி அமைத்து அதில் புதியதாக மின் மோட்டார் பொருத்தி மேல் நிலை நீர்தேக்கத்தொட்டிக்கு குடிநீர் ஏற்றுதல் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடுத் தொகை ரூ.**6.00** இலட்சத்திற்கு குடிநீரின் அவசரஅவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகர் மன்றத்தலைவர் முன் அனுமதி அனுமதி பெற்று மேல் நட வடிக்கை எடுத்துள்ளதையும் மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம், செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
**(தீர்மான எண் 674, நாள்.31.05.2023, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது )**

**26.** இந்நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் (நகர்புறம்) (Swachu Bharath Mission (Urban) 2.0 2021-2022 திட்டத்தின்கீழ் சமுதாய கழிவறை, பொது கழிப்பிடம், தனிநபர் கழிப்பிடம் மற்றும் சிறுநீர் கழிப்பிடம் கட்ட நகராட்சி பங்களிப்புடன் கூடிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.**5990/2022**/SBM நாள்.**11.04.2022**ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி வார்டு எண்**26**ல் பைத்தூர்ரோடு பகுதியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் புதியதாக சமுதாய கழிப்பிடம் கட்டுதல் பணிக்கு **24.00** இலட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ள **22.06.2022**ல் மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.ஜே.மகேஸ்வரன் என்பவருக்கு **01.07.2022**ல் வேலை உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வந்த நிலையில் மேற்படி பணியினை ஒப்பந்த காலத்திற்குள் முழுமையாக செய்து முடிக்காத காரணத்தால் பல முறை நேரிலும் பல நினைவூட்டு கடிதத்தின் வாயிலாகவும் பணியினை விரைந்து முடிக்க ஒப்பந்ததாரருக்கு தெரிவித்தும் ஒப்பந்ததாரர் எவ்விதமான பதிலும் விளக்கமும் அளிக்க முன் வராத காரணத்தால் திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி வழங்கியுள்ள வேலை உத்திரவினை இரத்து செய்து மீதமுள்ள பணிக்கான மதிப்பீடுத் தொகை ரூ.**15,15,000/–**க்கு இலட்சத்திற்கு **20.04.2023** ல் மின்னனுவில் மறு ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ் கண்டவாறு வரபெற்றது.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் | விலை விபரம் அதிகம்/ குறைவு |
|---|---|---|
| 1 | M.S. Matriex Shelters, ஒப்பந்ததாரர் ,ஆத்தூர் | **0.05%** மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.ஆர்.செல்லக்கண்ணு ஒப்பந்ததாரர் ,ஆத்தூர் | **0.06%**மதிப்பீட்டைவிட அதிகம் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M.S. Matriex Shelters, ஒப்பந்ததாரர் , ஆத்தூர் என்பவர் **0.05** மதிப்பீட்டு விலை விட குறைந்த விலை கொடுத்துள்ளதை ஏற்று மேற்படி பணிக்கு பணி உத்திரவு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் பதிவு செய்யலாம்.

**(தீர்மான எண் 675, நாள்.31.05.2023, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது )**

**27.** தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் (நகர்புறம்) (Swachu Bharath Mission (Urban) 2.0 2021-2022 திட்டத்தின்கீழ் சமுதாய கழிவறை, பொது கழிப்பிடம், தனி நபர் கழிப்பிடம் மற்றும் சிறுநீர் கழிப்பிடம் கட்ட நகராட்சி பங்களிப்புடன் கூடிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.**5990/2022**/SBM நாள்.**11.04.2022**ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி வார்டு எண்**31**ல் அம்பேத்கார் நகர் பகுதியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் புதியதாக சமுதாய கழிப்பிடம் கட்டுதல் பணிக்கு **24.00** இலட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ள**22.06.2022**ல் மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.ஜே.மகேஸ்வரன் என்பவருக்கு **01.07.2022**ல் வேலை உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வந்த நிலையில் மேற்படி பணியினை ஒப்பந்த காலத்திற்குள் முழுமையாக செய்து முடிக்காத காரணத்தால் பலமுறை நேரிலும் பல நினைவூட்டு கடிதத்தின் வாயிலாகவும் பணியினை விரைந்து முடிக்க ஒப்பந்ததாரருக்கு தெரிவித்தும் ஒப்பந்ததாரர் எவ்விதமான பதிலும் விளக்கமும் அளிக்க முன் வராத காரணத்தால் திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி வழங்கியுள்ள வேலை உத்திரவினை இரத்து செய்து மீதமுள்ள பணிக்கான மதிப்பீடுத் தொகை ரூ.**14,50,000/–**க்கு இலட்சத்திற்கு **20.04.2023**ல் மின்னனுவில் மறு ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ் கண்டவாறு வரபெற்றது.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் | விலை விபரம் அதிகம்/ குறைவு |
|---|---|---|
| 1 | M.S. Matriex Shelters, ஒப்பந்ததாரர் ,ஆத்தூர் | **0.01%** மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.ஆர்.செல்லக்கண்ணு ஒப்பந்ததாரர் ,ஆத்தூர் | **0.07%**மதிப்பீட்டைவிட அதிகம் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M.S. Matriex Shelters, ஒப்பந்ததாரர் , ஆத்தூர் என்பவர் **0.01%** மதிப்பீட்டு விலை விட குறைந்த விலை கொடுத்துள்ளதை ஏற்று மேற்படி பணிக்கு பணி உத்திரவு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் பதிவு செய்யலாம்.

**(தீர்மான எண் 676, நாள்.31.05.2023, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது )**

**28.** ஆத்தூர் நகராட்சிக்கு **15–**வது மத்திய நிதிக்குழு **2022–2023–**ம் நிதியாண்டில் Tied Grant–ன் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்குண்டான LCV வாகனங்கள்**10** எண்ணிக்கை புதியதாக கொள்முதல் செய்தல் பணிக்கு ரூ.**73.00** இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி வழங்கி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்**1600/2022**/CFC1, நாள்**21.03.2023**ல் தெரிவிக்கப்பட்டுள்ளதை நகர்மன்றத்தீர்மானம் எண்**645**, நாள்**28.04.2023**ல்பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி பணிக்கு **20.04.2023**ல் மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ் கண்டவாறு இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் | தகுதி | விலை விபரம் அதிகம்/ குறைவு |
|---|---|---|---|
| 1 | M/S.Lakshmi Auto diesel Works Mettur | தொழில் நுட்ப தகுதி பெற்றுள்ளது | **0.05%** மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | Mani Motors and traders Salem | தொழில் நுட்ப தகுதி பெற்றுள்ளது | **0.74%** மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்பு.ளிளிகளை கூர்ந்தாய்வு குழுவால் தொழில் நுட்ப தகுதி ( Technical Evaluation ) குறித்து கூராய்வு செய்யப்பட்டது. இதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுமே தொழில் நுட்ப தகுதி பெற்று இருப்பதால் இரண்டு ஒப்பந்ததரார்களின் Price Bid **23.05.2023**ல் திறக்கப்பட்டது. இதில் **0.05%** மதிப்பீட்டைவிட அதிகம் கொடுத்துள்ள M/S Lakshmi Auto diesel Works Mettur, என்ற நிறுவனத்திடம் விலை குறைப்பு செய்து தர கோரியதில் **0.10%** குறைத்து கொடுத்துள்ள விலை விகிதத்தினை மதிப்பீட்டை விட **0.05%** குறைவாக கொடுத்து உள்ளதை ஏற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் பதிவு செய்யலாம்.

**(தீர்மான எண் 677, நாள்.31.05.2023, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது )**

29. ஆத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அனைத்து வார்டுகளிலும் 2023–24ம் ஆண்டிற்கான நிலுவை வரிகள் மற்றும் நடப்பு வரிகளான சொத்துவரி , காலிமனை வரி, கடிநீர் கட்டணங்கள் தொழில் வ. மந்றும் வரியில்லா இனங்கள் அனைத்தையும் 30.04.2023க்குள் நகராட்சி கருவூலத்தில் செலுத்தவதற்கும், இதில் சொத்தவரி செலுத்துபவர்களுக்கு 5% ( சதவீதம் ) ஊக்க தொகை வழுங்கப்படும் என நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செய்தி வெளியிட்டின்படி சொத்துவரி செலுத்த வேண்டி தனியார் துறை மூலம் ஆட்டோ விளம்பரம் செய்யவும், நகராட்சி எல்லைக்குட்ப்பட்ட பகுதிகளில் 10 இடங்களில் பேனர்கள் வைக்கவும் துண்டு பிரசுரங்கள் அச்சிடவும்ம மற்றும் செய்தி தாள்களில் வெயிடவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/– இலட்சத்திற்கு பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம். மேலும் மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ந தலைவர் அவர்களின் முன் அனுமதி மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத் தொகையை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(தீர்மான எண் 678, நாள்.31.05.2023, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது )**

( ஒம் ) .திருமதி.ம. நிர்மலாபபிதா
தலைவர்
ஆத்தூர் நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர்
ஆத்தூர் நகராட்சி